தொகுதி கண்ணோட்டம்

ஆரணி

திருவண்ணாமலை மாவட்டத்தில் பட்டு நகரம் என்று அழைக்கப்படும் ஆரணி நாடாளுமன்ற தொகுதி உருவாக்கப்பட்டு இதுவரை 3 தேர்தல்களை சந்தித்துள்ளது. தற்போது 4-வது தேர்தலை சந்திக்கிறது. இந்த தொகுதியில் போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி (தனி), விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சி, மயிலம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகள் அடங்கி உள்ளன.

தந்தை– மகன் வெற்றி

தொகுதி மறுசீரமைப்பிற்கு பின்னர் 2009-ல் உருவாக்கப்பட்ட ஆரணி நாடாளுமன்ற தொகுதிக்கு நடந்த முதல் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் எம்.கிருஷ்ணசாமி 3,96,728 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் முன்னாள் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் 2,89,898 வாக்குகள் பெற்று தோல்வியை தழுவினார்.

பின்னர் 2014-ல் நடந்த தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட வக்கீல் செஞ்சி வி.ஏழுமலை 5,02,721 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து தி.மு.க. சார்பில் போட்டியிட்ட அப்போதைய திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் ஆர்.சிவானந்தம் 2,58,877 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் போட்டியிட்ட முன்னாள் மத்திய மந்திரி ஏ.கே.மூர்த்தி 2,53,332 வாக்குகள் பெற்று 3-வது இடத்தையும், தனித்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் எம்.கே.விஷ்ணுபிரசாத் 27,717 வாக்குகள் பெற்று 4-வது இடத்தையும் பிடித்தனர்.

கடந்த 2019-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட எம்.கே.விஷ்ணுபிரசாத் 6,17,760 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். அவரை எதிர்த்து அ.தி.மு.க. சார்பில் மீண்டும் போட்டியிட்ட செஞ்சி வி.ஏழுமலை 3,86,954 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார்.

புதுமுகங்கள்

தற்போது நடைபெற இருக்கும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் ஆரணி தொகுதியில் புதுமுகங்கள் களம் காண்கின்றனர். தி.மு.க. சார்பில் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் தரணிவேந்தன், அ.தி.மு.க. சார்பில் ஒன்றிய செயலாளர் ஜி.வி.கஜேந்திரன், பா.ம.க. சார்பில் அ.கணேஷ்குமார், நாம் தமிழர் கட்சி சார்பில் டாக்டர் கு.பாக்கியலட்சுமி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

ஆரணி தொகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். இங்கு வன்னியர்கள் 40 சதவீதமும், முதலியார்கள் 27 சதவீதமும், ஆதிதிராவிடர்கள் 18 சதவீதமும், முஸ்லிம்கள் 4 சதவீதமும் உள்ளனர்.

எதிர்பார்ப்பு

ஆரணி மற்றும் அதனை சுற்றியுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் பட்டு சேலை உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு தயாரிக்கப்படும் பட்டு சேலைக்கு மத்திய அரசு புவிசார் குறியீடு வழங்கி உள்ளது. எனவே ஆரணி பகுதியில் ஜவுளி பூங்கா அமைக்க பட்டு சேலை உற்பத்தியாளர்கள் 25 ஏக்கர் நிலம் வாங்கி உள்ளனர். இங்கு ஜவுளிபூங்கா அமைக்க வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது.

மேலும் இது நவீன அரிசி ஆலைகள், அரிசி உற்பத்தியாளர்கள் நிறைந்த தொகுதியாகும். எனவே நெல் அரிசி உற்பத்தி தொழில் பேட்டை அமைத்து, மத்திய, மாநில அரசு வழங்கக்கூடிய அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டும் என்பதும் முக்கிய கோரிக்கையாக இருந்து வருகிறது. ஆரணி புதுகாமூர் பகுதியில் அமைந்துள்ள புத்திரகாமேட்டீஸ்வரர் சிவன் கோவில் ராமர் பிறப்பதற்கு காரணமான கோவிலாக கூறப்படுகிறது. இதனால் இங்கு தசரத சக்கரவர்த்திக்கு தனி சன்னதி உள்ளது. எனவே இந்த கோவிலை புதுப்பிக்க வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது.

அதேபோன்று வந்தவாசி பகுதியில் கோரைப்பாய் உற்பத்தி அதிக அளவில் நடக்கிறது. மத்திய, மாநில அரசுகள் கோரைப்பாய் தயாரிப்புக்கு மானியத்துடன் கூடிய கடன்கள் வழங்க வேண்டும் என்பதும் கோரிக்கையாக இருக்கிறது.

மயிலம் தொகுதியில் உள்ள தமிழ் புலவர்கள் கல்லூரியை உலகத்தரம் வாய்ந்ததாக உயர்த்த வேண்டும். மயிலம் முருகர் கோவிலை சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டும், செஞ்சி ராஜா தேசிங்கு கோட்டை சுற்றுலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான பூர்வாங்க பணிகள் முழுமையாக நடைபெறவில்லை, பணிகளை விரைந்து முழுமையாக முடிக்க வேண்டும் என்பதும் மக்களின் கோரிக்கையாக உள்ளது. போளூரில் ரெயில்வே மேம்பால பணிகள் நீண்ட நாட்களாக நடைபெற்று வருகிறது. இதனால் பொதுமக்கள், வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். ரெயில்வே மேம்பால பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது போளூர் பகுதி மக்களின் கோரிக்கையாக இருக்கிறது.

போளூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள தனியார் சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கு பலகோடி ரூபாய் பல ஆண்டுகளாக வழங்கப்படாமல் நிலுவையாக உள்ளது. இதை வழங்கக்கோரி கரும்பு விவசாயிகள் பலகட்ட போராட்டங்களை நடத்தியும் இதுவரை வழங்கவில்லை. அதை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கையாக இருக்கிறது. போளூரை நகராட்சியாக தரம் உயர்த்த வேண்டும், ஜவ்வாது மலையை மேம்படுத்தி சுற்றுலா தலமாக்க வேண்டும். ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தை போளூர் வரை நீட்டிக்க வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது.

மேலும் செய்யாறை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்க வேண்டும், அரசு வேளாண்மை கல்லூரி, மகளிர் கல்லூரி கொண்டு வரவேண்டும் என்பது செய்யாறு பகுதி மக்களின் கோரிக்கையாக இருந்து வருகிறது.

ஆரணி நாடாளுமன்ற தொகுதியில் அடங்கி உள்ள வந்தவாசி தனி தொகுதி கடந்த 50 ஆண்டுகளாகவே பின்தங்கிய நிலையில் எந்தவித முன்னேற்றமும் இன்றி இருப்பதாக பொதுமக்கள் கூறுகின்றனர். இங்குள்ள புதிய பஸ்நிலையம் கடந்த தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டது. ஆனால் இதுவரை பஸ்நிலையம் முழுமையாக இயங்கவில்லை. மாலை 6 மணிக்குமேல் இந்த பஸ் நிலையத்துக்கு பஸ்கள் வருவதில்லை. இரவில் மின் விளக்குகளும் எரிவதில்லை. இதனால் இருள் சூழ்ந்து பயணிகள் வருவதற்கு முடியாத நிலை இருந்து வருகிறது. வந்தவாசி அரசு மருத்துவமனையில் போதிய வசதிகள் இல்லாததால் அவசர சிகிச்சைக்கு வருபவர்கள் செங்கல்பட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். எனவே மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும், பஸ் நிலையத்தை முழுமையாக இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது.

இங்குள்ள சுகநதி ஒரு காலத்தில் மக்களின் குடிநீர் மற்றும் விவசாயத்துக்கு பயன்பட்டு வந்தது. தற்போது கழிவுநீர் கால்வாயாக மாறி விட்டது. இதனை தூர்வாரி படகு சவாரி விடவேண்டும் என தொகுதி எம்.எல்.ஏ. அம்பேத்குமார் சட்டமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். அந்த கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

பாய் உற்பத்தி அதிகமாக நடைபெறுவதால் வந்தவாசியில் கோரை பாய் பூங்கா அமைக்கப்படும் என்று தற்போதைய முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே கூறியிருந்தார். அதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

2019-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் முடிவு எப்படி?

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஆரணி தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட டாக்டர் எம்.கே.விஷ்ணுபிரசாத் வெற்றிபெற்றார். அவரை எதிர்த்து 2–வது முறையாக போட்டியிட்ட செஞ்சி ஏழுமலை தோல்வியடைந்தார்.

முதல் 4 இடங்களை பிடித்தவர்கள் விவரம் வருமாறு:–

எம்.கே.விஷ்ணுபிரசாத் (காங்கிரஸ்)	6,17,760
வி.ஏழுமலை (அ.தி.மு.க.)	3,86,954
செந்தமிழன் (சுயேட்சை)	46,383
ஏ.தமிழரசி (நாம் தமிழர் கட்சி)	32,409

வெற்றி யார் கையில்?

ஆரணி நாடாளுமன்ற தொகுதி இதுவரை 3 தேர்தல்களை சந்தித்துள்ளது. அதில் 2 முறை காங்கிரஸ் கட்சியும், ஒரு முறை அ.தி.மு.க.வும் வெற்றிபெற்றுள்ளது. கடந்த 2021-ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் ஆரணி நாடாளுமன்ற தொகுதியில் உள்ள போளூர், ஆரணி தொகுதிகளில் அ.தி.மு.க.வும், மயிலம் தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க.வும் வெற்றிபெற்றுள்ளது. செய்யாறு, வந்தவாசி, செஞ்சி ஆகிய தொகுதிகளில் தி.மு.க. வெற்றிபெற்றுள்ளது. எனவே சமநிலையில் இருந்த இந்த வெற்றியில் தற்போது பா.ஜனதா கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. வெளியே வந்துவிட்டது. பா.ஜனதா கூட்டணியில் பா.ம.க. இடம் பெற்றுள்ளது.

2009-ல் நடந்த முதல் தேர்தலில் அப்போதைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் எம்.கிருஷ்ணசாமியும், 2019-ல் நடந்த தேர்தலில் அவரது மகன் எம்.கே.விஷ்ணுபிரசாத்தும் காங்கிரஸ் சார்பில் வெற்றிபெற்றனர். 2014 தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் செஞ்சி ஏழுமலை வெற்றிபெற்றார்.

எம்.எஸ். தரணிவேந்தன்

ஜி.வி. கஜேந்திரன்

அ. கணேஷ்குமார்

கு. பாக்கியலட்சுமி

தற்போது நடைபெறும் தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜனதா ஆகிய கட்சிகள் தனித்தனியே கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிடுவதால் நான்கு முனை போட்டி நிலவுகிறது. பா.ஜனதா கூட்டணியில் பா.ம.க. இடம் பெற்றுள்ளது. கடந்த 2019 நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற டாக்டர் எம்.கே.விஷ்ணுபிரசாத் தொகுதி பக்கமே வந்ததில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தது. அதனால் அவர் இந்த தேர்தலில் கடலூர் தொகுதிக்கு மாற்றப்பட்டு, ஆரணி தொகுதி முதல் முறையாக தி.மு.க.வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் தி.மு.க.வினர் மிகுந்த உற்சாகத்தில் உள்ளனர்.

இதனால் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

வாக்காளர்கள் விவரம்

கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியல் படி ஆரணி நாடாளுமன்ற தொகுதியில் 7,31,824 ஆண் வாக்காளர்களும், 7,58,507 பெண் வாக்களர்களும், மூன்றாம் பாலினம் 109 பேர் என மொத்தம் 14,90,440 வாக்காளர்கள் உள்ளனர். ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்களே அதிகம் உள்ளனர்.

சட்டமன்ற தொகுதி வாரியாக வாக்காளர்கள் எண்ணிக்கை விவரம் வருமாறு:–

ஆரணி	2,76,930
செய்யாறு	2,60,491
போளூர்	2,41,676
வந்தவாசி (தனி)	2,44,113
செஞ்சி	2,54,442
மயிலம்	2,12,788

2021 சட்டமன்ற தேர்தல் முடிவுகள்

கடந்த 2021–ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ஆரணி நாடாளுமன்ற தொகுதியில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் கட்சிகளுக்கு கிடைத்த ஓட்டு விவரம் வருமாறு:–

போளூர் (அ.தி.மு.க. வெற்றி)

அக்ரி கிருஷ்ணமூர்த்தி (அ.தி.மு.க.)	97,732
கே.வி.சேகரன் (தி.மு.க.)	88,007
லாவண்யா (நாம் தமிழர் கட்சி)	10,197

ஆரணி (அ.தி.மு.க. வெற்றி)

சேவூர் எஸ்.ராமச்சந்திரன் (அ.தி.மு.க.)	1,02,961
எஸ்.எஸ்.அன்பழகன் (தி.மு.க.)	99,833
பிரகலதா (நாம் தமிழர் கட்சி)	10,491

செய்யாறு (தி.மு.க. வெற்றி)

ஒ.ஜோதி (தி.மு.க.)	1,02,460
தூசி மோகன் (அ.தி.மு.க.)	90,189
பீமன் (நாம் தமிழர் கட்சி)	12,192

வந்தவாசி –தனி (தி.மு.க. வெற்றி)

எஸ்.அம்பேத்குமார் (தி.மு.க.)	1,02,064
முரளிசங்கர் (பா.ம.க.)	66,111
பிரபாவதி (நாம் தமிழர் கட்சி)	9,284

செஞ்சி (தி.மு.க. வெற்றி)

கே.எஸ்.மஸ்தான் (தி.மு.க.)	1,09,625
ராஜேந்திரன் (பா.ம.க.)	73,822
சுகுமார் (நாம் தமிழர் கட்சி.)	9,920

மைலம் (பா.ம.க. வெற்றி)

சிவகுமார் (பா.ம.க.)	81,044
மாசிலாமணி (தி.மு.க.)	78,814
உமாமகேஸ்வரி (நாம் தமிழர் கட்சி)	8,340

வி.ஐ.டி. பல்கலைக்கழக தின விழாவில், சிறந்த மாணவ– மாணவிகளுக்கு வேந்தர் விருது வழங்கப்பட்டது. அகில இந்திய தொழில்நுட்ப குழு தலைவர் டி.ஜி.சித்தராம், வேந்தர் விசுவநாதன், துணைத்தலைவர்கள் சங்கர் விசுவநாதன், ஜி.வி.செல்வம், உதவி துணைத்தலைவர் காதம்பரி எஸ்.விசுவநாதன் ஆகியோர் படத்தில் உள்ளனர்.

வி.ஐ.டி. பல்கலைக்கழக தினவிழா கொண்டாட்டம்

அகில இந்திய தொழில்நுட்ப குழு தலைவர் டி.ஜி.சித்தராம் பங்கேற்பு

வேலூர், மார்ச்.29-

வி.ஐ.டி. பல்கலைக்கழக தினவிழா கொண்டாடப்பட்டது. இதில் அகில இந்திய தொழில்நுட்ப குழு தலைவர் டி.ஜி.சித்தராம் கலந்து கொண்டார்.

பல்கலைக்கழக தினவிழா

வேலூர் வி.ஐ.டி.யில் பல்கலைக்கழக தின விழா மற்றும் விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது. வேந்தர் ஜி.விசுவநாதன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், ஜி.வி.செல்வம், உதவி துணைத் தலைவர் காதம்பரி எஸ்.விஸ்வநாதன் மற்றும் உடற்கல்வி இயக்குனர் தியாக சந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பதிவாளர் ஜெயபாரதி வரவேற்றார்.

விழாவில் வேந்தர் ஜி.விசுவநாதன் பேசுகையில், இந்த பல்கலைக்கழகம் தொடங்கி 40 ஆண்டுகள் ஆகிறது. ஸ்டார்ஸ் திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் படிக்கும் மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களது கல்விக்கு உதவி செய்கிறோம். ஸ்டார்ஸ் மற்றும் பிற தொண்டு நிறுவனம் மூலம் 10-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களை ஊக்குவித்து அவர்களை மேலும் படிக்க உதவி செய்கிறோம். கல்வி இல்லாமல் நம்மால் வளர்ந்த நாடாக மாற முடியாது. சமூதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை போக்க கல்வி அவசியம் என்றார்.

வேலை கொடுப்பவர்களாக

சிறப்பு அழைப்பாளராக அகில இந்திய தொழில்நுட்ப குழு தலைவர் டி.ஜி.சித்தராம் கலந்து கொண்டு சிறந்த மாணவ-மாணவிகளுக்கு வேந்தர் விருது மற்றும் சான்றிதழ்களை வழங்கி பேசினார். அவர் பேசுகையில், தற்போது உள்ள காலகட்டத்தில் மாணவர்களுடன் பெற்றோர்களும் இணைந்து எந்த கல்வி கற்க வேண்டும் என்று தீர்மானிக்கின்றனர். ஆராய்ச்சி கல்வி, கண்டுபிடிப்புகளுக்கும் அதற்கான காப்புரிமை பெறுவதிலும் உலகளவில் இந்தியா 3-ம் இடத்திற்கு முன்னேறி உள்ளது.

இந்தியா தற்போது உலகில் 5-வது பெரிய பொருளாதார நாடாக உள்ளது. அது விரைவில் 3-வது நாடாக வளரும். அதற்கு மாணவர்களின் உழைப்பும் தேவை. புதிய கல்விக் கொள்கை அடிப்படையில் ஆண்டுக்கு ரூ.300 கோடி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக பெண்களுக்கு பிரகதி திட்டம் மூலம் ஆண்டுக்கு ரூ.50,000 கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்திய மாணவர்களை போல் திறமையான மாணவர்களை வேறு எங்கும் பார்க்க முடியாது. மாணவர்கள் வேலை கொடுப்பவர்களாவும், வேலையை உருவாக்குபவர்களாகவும் இருக்க வேண்டும் என்று கூறினார்.

முதல்-மந்திரி பதவியில் இருந்து

கெஜ்ரிவாலை நீக்கக்கோரிய வழக்கு தள்ளுபடி

டெல்லி ஐகோர்ட்டு நடவடிக்கை

புதுடெல்லி, மார்ச்.29-

டெல்லி அரசின் மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் முதல்-மந்திரி கெஜ்ரிவாலை அமலாக்கத்துறையினர் கைது செய்துள்ளனர்.

ஆனாலும் அவர் தொடர்ந்து முதல்-மந்திரியாக பதவி வகித்து வருகிறார். சிறையில் இருந்தவாறே உத்தரவுகளையும் பிறப்பித்து வருகிறார்.

எனவே அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டுள்ள கெஜ்ரிவாலை முதல்-மந்திரி பதவியில் இருந்து நீக்கக்கோரி டெல்லி ஐகோர்ட்டில் பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சுர்ஜித் சிங் யாதவ் என்பவர் தாக்கல் செய்த இந்த மனுவை பொறுப்பு தலைமை நீதிபதி மன்மோகன் மற்றும் நீதிபதி மன்மீத் பிரித்தம் சிங் ஆகியோரை கொண்ட அமர்வு நேற்று விசாரித்தது.

அப்போது, கெஜ்ரிவால் முதல்-மந்திரியாக தொடர எந்தவித சட்டப்பூர்வ தடையும் இல்லை எனக்கூறி மனுவை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

இந்த விவகாரத்தில் நிர்வாகமும், ஜனாதிபதியும்தான் முடிவு எடுக்க வேண்டும் எனக் கூறிய நீதிபதிகள், கெஜ்ரிவால் முதல்-மந்திரியாக தொடர்வதில் அரசியல்சாசன ரீதியாக தவறு இருப்பதாக தெரிந்தால் ஜனாதிபதியோ அல்லது துணைநிலை கவர்னரோ நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் தெரிவித்தனர்.

பறக்கும்படை என்ற பெயரில்

வணிகர்களின் பணத்தை பறிமுதல் செய்தால் கடையடைப்பு நடத்துவோம்

ஏ.எம்.விக்கிரமராஜா அறிவிப்பு

சென்னை, மார்ச்.29-

பறக்கும் படை என்ற பெயரில் வணிகர்களின் பணத்தை பறிமுதல் செய்யும் நிலை தொடர்ந்தால், 19-ந்தேதி வரை கடையடைப்பு போராட்டம் நடத்துவோம் என்று ஏ.எம்.விக்கிரமராஜா தெரிவித்துள்ளார்.

ஆலோசனை கூட்டம்

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் அவசர ஆலோசனைக் கூட்டம் மாநிலத்தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா தலைமையில் கோயம்பேட்டில் நடந்தது. பொருளாளர் ஏ.எம்.சதக்கத்துல்லா, தலைமைச்செயலாளர் ஆர்.ராஜ்குமார், கூடுதல் செயலாளர் வி.பி.மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை மாவட்டத் தலைவர்கள் எம்.ஆர்.பன்னீர் செல்வம், என்.டி.மோகன், எட்வர்ட், எஸ்.சாமுவேல், என்.ஜெயபால், பி.ஆதி குருசாமி, த.ராமசந்திரன் உள்பட பலர் கூட்டத்தில் பேசினர். தேர்தல் நடத்தை விதிமுறை காரணமாக வணிகர்கள், விவசாயிகள், பொதுமக்கள் பாதிக்கப்படுவது குறித்து விவாதிக்கப்பட்டது.

சவாலாக இருக்கிறது

கூட்டத்தில், பேரமைப்பின் தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா பேசியதாவது:-

பறக்கும்படை என்ற பெயரில் தமிழகம் முழுவதும் விவசாயிகள், வணிகர்கள், பொதுமக்கள், மருத்துவ செலவினங்கள் அவர்களின் அத்தியாவசியத் தேவைக்கு எடுத்துக் செல்லப்படும் பணம் அதிக அளவில் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றது.

உண்மையாகவே தேர்தலில் லஞ்சம் கொடுப்பதற்காக எடுத்துச் செல்லப்படும் ரொக்கம் மற்றும் அரசியல்வாதிகளால் எடுத்துச்செல்லப்படும் ரொக்கம் போன்றவை இதுவரை கைப்பற்றப்பட்டதாகவோ, பறிமுதல் செய்யப்பட்டதாகவோ எவ்வித தகவலும் செய்திகளும் இல்லை.

நேர்மையான வணிகம் செய்பவர்களின் அன்றாட செலவினங்களுக்கான எடுத்துச்செல்லும் ரொக்கமே அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றது. முரண்பாடான தேர்தல் நடத்தை விதிமுறைகளால், வணிகர்கள் தேர்தல் வரை தங்கள் வணிகத்தை தொடர்வது மிகவும் சவாலானதாகவே தெரிய வருகின்றது.

கடையடைப்பு போராட்டம்

இதுசம்பந்தமாக தேர்தல் ஆணையர் சத்யபிரத சாகுவை மீண்டும் நேரில் சந்தித்து முறையிட உள்ளோம். தீர்வு எட்டப்படாமல், இதே நிலை நீடித்தால், தேர்தல் தேதியான ஏப்ரல் 19-ந்தேதி வரை கடையடைப்பு போராட்டம் நடத்த அறிவிப்பு வெளியிடப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

Godrej Finance Limited
கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்
Godrej | FINANCE
A Godrej Capital Company

பொது அறிவிப்பு

இந்திய ரிசர்வ் வங்கி (வங்கி அல்லாத நிதி நிறுவனங்களுக்கான - அளவுகோல் அடிப்படையிலான ஒழுங்குமுறை) வழிமுறைகள், 2023 இன் முதன்மை வழிமுறையின் 43 வது பத்தியின் அடிப்படையில் 'கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்' வழங்கிய பொது அறிவிப்பு

கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் ("கம்பெனி" அல்லது "GFL") என்பது நிறுவனங்கள் சட்டம், 1956 (கார்ப்பரேட் அடையாள எண்: U67120MH1992PLC065457) இன் கீழ் நிறுவப்பட்ட ஒரு பொது லிமிடெட் நிறுவனம் ஆகும், மேலும் இது டெபாசிட்களை ஏற்காத வங்கி அல்லாத நிதி நிறுவனமாக ("NBFC") இந்திய ரிசர்வ் வங்கியிடம் (COR. 0:3613) பதிவு செய்யப்பட்டுள்ளது. GFL-இன் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது மகாராஷ்டிராவில் உள்ள கோத்ரேஜ் ஒன், பிரோஜ்ஷாநகர், கிழக்கு எக்ஸ்பிரஸ் ஹைவே, விக்ரோலி (கி), மும்பை - 400079, என்ற இடத்தில் உள்ளது.

நிறுவனம் தற்போது தமிழ்நாட்டில், மை பிரான்ச் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், ஷமிம் டவர், எண் 512, தடாகம், மெயின் ரோடு, ஆர்.எஸ். புரம், கோயம்புத்தூர் – 641002 -இல் உள்ள தனது கிளை அலுவலகத்தை இந்த அறிவிப்பு வெளியான 3 மாதங்களுக்குள் செயல்பாட்டுக் காரணங்களுக்காக தமிழ்நாட்டிலேயே 4-வது ஃப்ளோர், ஸ்ரீ வாரி கிகானி சென்டர், வடகோவை, கோயம்புத்தூர் – 641002-ற்கு மாற்றும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

வாடிக்கையாளர்கள் அனைத்து வினவல்களையும் **customercare@godrejcapital.com இல் தெரிவிக்கலாம்.**

இது சம்பந்தமாக ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் அல்லது விசாரணைகள் தேவைப்பட்டால், அதை **இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் உள்ள தலைமை இணக்க அதிகாரி திரு. யோகேஷ் ஜெயினிற்கு அல்லது gfl.compliance@godrejfinance.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.**

கையெழுத்திட்டவர்/-
கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக

இடம்: **கோயம்புத்தூர்**
தேதி: 29/03/2024

ஒடிசா சட்டசபை தேர்தல்

கட்சி பிரமுகர்களின் மனைவிகளுக்கு வாய்ப்பு

ஆளும் பிஜூ ஜனதா தளம் வழங்கியது

புவனேஸ்வர், மார்ச்.29-

ஒடிசாவில் முதல்-மந்திரி நவீன் பட்நாயக் தலைமையிலான பிஜூ ஜனதா தள கட்சியின் ஆட்சி நடந்து வருகிறது. அங்கு நாடாளுமன்ற தேர்தலுடன் மாநில சட்டசபைக்கும் தேர்தல் நடைபெற உள்ளது.

அதன்படி ஒடிசாவின் 21 மக்களவை தொகுதிகளுக்கும், 147 சட்டசபை தொகுதிகளுக்கும் மே 13-ந்தேதி தொடங்கி ஜூன் 1-ந்தேதி வரை 4 கட்டங்களாக தேர்தல் நடக்க இருக்கிறது.

இந்த நிலையில் நாடாளுமன்றம் மற்றும் சட்டசபை தேர்தலில் பிஜூ ஜனதா தளம் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் முதற்கட்ட பட்டியலை முதல்-மந்திரி நவீன் பட்நாயக் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இதில் 2019 தேர்தலில் பிஜூ ஜனதா தளம் சார்பில் போட்டியிட்ட 4 பேருக்கு பதிலாக அவர்களின் மனைவிகளுக்கு இம்முறை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி அரசு வேலையை ராஜினாமா செய்துவிட்டு, 2019 தேர்தலில் நபரங்பூர் சட்டசபை தொகுதியில் பிஜூ ஜனதா தளம் சார்பில் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆன சதாசிவ பிரதானிக்கு பதிலாக அவரது மனைவி கவுசல்யா பிரதானி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

அதேபோல் சுரதா சட்டசபை தொகுதியில் இருந்து தொடர்ந்து 3 முறை எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்ட பூர்ண சந்திர ஸ்வைனுக்கு இம்முறை சீட் வழங்க பிஜூ ஜனதா தளம் மறுத்துவிட்டது. அவருக்கு பதிலாக அவரின் மனைவி சங்கமித்ரா ஸ்வைனை அதே தொகுதியில் களமிறக்கியுள்ளது.

இது தவிர கடந்த தேர்தலில் உமர்கோட் சட்டசபை தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த சுபாஸ் கோண்டுக்கு மாற்றாக அவரது மணைவிக்கு நபினா நாயக் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

அதேபோல் பாலசோர் மக்களவை தொகுதியில் பா.ஜனதா வேட்பாளரிடம் தோல்வியை தழுவிய முன்னாள் எம்.பி. ரவீந்திரனின் மனைவி சுபாஷினி ஜெனாவுக்கு, பாஸ்தா சட்டசபை தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் TNPSC
TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION
No.3, TNPSC Road, Chennai-600 003.

The Marks and Rank Position in Interactive Mode for direct recruitment to the posts of **Assistant Agricultural Officer** in Tamil Nadu Agricultural Extension Subordinate Service and **Assistant Horticultural Officer** in Tamil Nadu Horticultural Subordinate Service based on the results of examination(CBT) conducted by the Tamil Nadu Public Service Commission on 07.02.2024 FN & AN and other conditions stipulated in the notification for the said recruitment, is available in the Commission's website at **http://www.tnpsc.gov.in**

Chennai – 600 003
Dated : 28.03.2024　DIPR/430/Display/2024　**Controller of Examinations**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் TNPSC
TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION
No.3, TNPSC Road, Chennai - 600 003.

Advertisement No.: 683　　**Dated :28.03.2024**
Notification No. : 04/2024

SHORT NOTICE

Tamil Nadu Public Service Commission will hold the Preliminary Examination for appointment by direct recruitment to the posts included in **Combined Civil Services Examination - I (Group - I Services) on 13.07.2024 F.N.**

For information relating to educational qualification, age limit, applicability of rule of reservation, scheme of examination, payment of fee, concessions and other details, prospective candidates are advised to refer to the detailed Notification uploaded in the Tamil Nadu Public Service Commission's website www.tnpsc.gov.in

DIPR/429/DISPLAY/2024　**Secretary**